1987 ஏப்ரல் 28]

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்திற்கு மதிப்பீடு சுமார் 1,200 இலட்சத்திற்கு தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களால் தயாரிக்கப்பட்டு, அவருடைய பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்திற்கு நீரியல் மற்றும் பொருளாதார சாத்தியக் கூறுகள் விரிவாக ஆராயப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை பரிசீலனை செய்து சாத்தியக் கூறுகள் இருப்பின் திட்ட அறிக்கை தலைமை பொறியாளரால் அனுப்பப்படும். இவ்வறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் அரசு பரிசீலனை செய்யும்.

கந்தர்வகோட்டை ஒன்றியம் அரயம்பட்டியிலிருந்து காட்டுநாவல் வரை வெள்ளத் தடுப்புச்சுவர்.

531—(*வினா எண். 10135) **திரு. ஜே. முகம்மது கனி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை ஒன்றியம் அரயம்பட்டியிலிருந்து காட்டுநாவல் வரை வெள்ள தடுப்புச் சுவர் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அரயம்பட்டி கிராமத்திற்கருகே தாலைவாரி குறுக்கே அணை கட்டும் திட்டத்தில் சுமார் 700 மீட்டர் நீளத்திற்கு வெள்ளத் தடுப்புக் கரை அமைக்கும் பணி உள்ளது. இந்தப்பணி தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டு உள்ளது. வழக்கின் தீர்ப்பு அரசுக்கு சாதகமாக வழங்கிய பின் பணிகள் ஆரம்பித்து முடிக்கப்படும்.

திரு. ஜே. முகம்மது கனி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த திட்டம் எப்போது செயலாக்கப்படும் என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்றும்

பின்னாலே இதே ஒன்றியத்தில் நடுப்பட்டி, நாயக்கர்பட்டி என்ற ஊரிலும் இந்த வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு கோர்ட்டிலே தடையாணையை வாங்கி கோர்ட்டிலே கேஸ் இருப்பதால், அந்தக் கேஸை வெகு வேகமாக முடிக்க வேண்டும் என்று அதிகாரிகளிடம் சொல்லியிருக்கிறோம். அப்படி அரசாங்கத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கினால் மிக வேகமாக வேலைகள் முடிக்கப்படும்.

குற்றாலம் புது அருவியில் அணைக்கட்டு.

532—(* வினா எண். 12071) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குற்றாலம் புதுஅருவியில் அணை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் ஆய்வில் உள்ளது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு திருநெல்வேலி மாவட்டத்திலே, குற்றாலத்தின் அருகிலே இந்த புது அருவித் திட்டம் என்று சொல்லப்படுகின்ற இந்த அணை கட்டப்படுவதால் அதன் மூலமாக இன்றைக்கு அங்கே காய்ந்து கிடக்கின்ற பல நிலங்கள் எல்லாம் நன்கு வளமாக பயிராகக்கூடிய வாய்ப்பு இருப்பதால், இந்தத் திட்டம் தலைமை என்ஜினியரிடமிருந்து எவ்வளவு நாட்களுக்குள் அரசுக்கு வரும்? இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு என்ன? பலன் பெறும் ஆயக்கட்டுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.